செய்தி வெளியீடு எண். 172 நாள். 31.03.2018

**திருவள்ளுர் மாவட்ட முன்னாள் படைவீரர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 28.03.2018 அன்று மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

இச்சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் அனேக முன்னாள் படைவீரர்கள் கலந்து கொண்டனர். இதில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரிடமிருந்து 15 மனுக்கள் பெறப்பட்டன. உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு பரிந்துரை செய்ய மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், இக்கூட்டத்தில் வங்கிகடன் வட்டி மானியம், கல்வி உதவித்தொகை, திருமண மானியம், மூக்கு கண்ணாடி நிதியுதவி மற்றும் ஈமச்சடங்கு நிதியுதவி ரூ.2,58,948 (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி எட்டு மட்டும்) நிதி உதவிகளுக்கான காசோலைகள் பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் உதவி இயக்குநர் (முன்னாள் படைவீரர் நலன்) திருமதி.அமீருன்னிஷா, துறைச்சார்ந்த அலுவலர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் அவர்கள் குடும்பத்தினர் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**